1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு விவசாயிகள் அபரிமிதமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்றும் அறுவடை அதிகமாக ஆகியிருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்குப் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அதன் காரணமாக மின்சாரக் கட்டணத்தைக் கூட வசூலிக்கக் கூடாது என்று போராட்டம் ஒரு பக்கத்திலே நடந்து கொண்டிருக்கிறது. அதற்காகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே பேசி வருகிறார்கள் என்பதும் இந்த மன்றத்திலே இருக்கின்றவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரசாங்கத்திலே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதாவது வெளிச்சந்தையிலே வாங்கப்படுகின்ற விலையை விட மத்திய அரசோ மாநில அரசோ நிர்ணயிக்கின்ற விலைக்கு நெல்லை வாங்கி விவசாயிகள் நஷ்டமடையாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்கின்ற ஒரு உத்திரவாதத்தை இந்த அரசு நிச்சயமாக அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை—மாமல்லபுரம் ஹோவர்கிராப் சர்வீஸ்.

* வினா எண் 301— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை—மாமல்லபுரம் இடையே ''ஹோவர் கிராப்'' சர்வீஸ் நடத்துவது குறித்து அரசு பரிசீலித்ததா?

(ஆ) ஆம் எனில் என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன். (அ மற்றும் ஆ). சென்னை—மாமல்லபுரத்திற்கு இடையே ''ஹோவர்கிராப்'' சர்வீஸ் நடத்துதல் பொருளாதார வகையில் சாத்தியம் அல்ல என்பதால் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது அப்போது அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. இராசாராம் அவர்கள் இந்தத் திட்டத்திற்கான பெரிய முயற்சியை எடுத்துக்கொண்டார்கள். இருந்தாலும் அது நடைபெற முடியவில்லை

[1979 மார்ச் 9

தற்போது கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாகவோ அல்லது அதிகமாக செலவு ஏற்படுகின்ற சூழ்நிலையின் காரணமாகவோ அந்த முயற்சியை மேற்கொள்ள முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத் தேவைப்படுகின்ற பொருளாதாரம் தான் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்படவில்லை. பொருளாதார வகையில் லாபமாக இயங்க முடியாது என்ற காரணத்தால் தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. 38 பயணிகளைக் கொண்டு செல்கின்ற ஹோவர் கிராப்டின் விலை 24 இலட்ச ரூபாய். 65 பயணிகளைக் கொண்டு செல்லுகின்ற கிராப்ட் 30 இலட்ச ரூபாய். 98 பயணிகளைக் கொண்டு செல்லுகின்ற கிராப்ட் 50 இலட்ச ரூபாய். இப்படி செலவு செய்தாலும் ஒருவருக்குக் கட்டணமாக 70 ரூபாய், 84 ரூபாய் என்று வசூலிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குச் செல்வதற்கு ஒன்றரை மணி நேரம் பிடிக்கும். ஆகவே, இவ்வளவு வசதிக் குறைவுகள் இருக்கின்ற காரணங்களை அடிப்படையாகக் வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயே கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாமல்லபுரத்திற்கும் சென்னைக்கும் இடையே பக்கிங்காம் கால்வாயினைச் சீர் செய்தாவது பயணிகளுக்கும் படகு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாமார்த்தியமாக வேறு திசைக்குக் கேள்வியைத் திருப்பி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கேள்வி கேட்கப்பட வேண்டியது துறை வேறு துறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.